ஜனநாயகத்திற்கு விரோதமாக யார் கைதானாலும் தி.மு.க. குரல் கொடுக்கும்

வெட்கத்தைப் பற்றி வி.சி.க. வன்னி அரசு பேசலாமா?

தி.மு.க. ஐ.டி. பிரிவு கண்டனம்!

சென்னை, அக். 23-

வி.சி.க. அமைச்சர் வன்னி அரசு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்து தி.மு.கழக ஐ.டி.பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது அதில் ஜனநாயகத்திற்கு விரோதமாக யார் கைதானாலும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குரல் கொடுப்பார்; வெட்கத்தைப் பற்றி வி.சி.க. அமைச்சர் வன்னி அரசு பேசலாமா? என்று கேள்வி எழுப்பியுள்ளது.

தி.மு.க. ஐ.டி. பிரிவு பதிவு வருமாறு:

அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு த.வெ.க அரசால் நிகழ்த்தப்பட்ட கைதுக்கு எதிராக கண்டனம் தெரிவித்திருந்தார் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இதற்காக, 'திமுகவுக்கும் வெட்கமில்லை' என எழுதி இருக்கிறார் அமைச்சர் வன்னி அரசு; உண்மையிலேயே ஜனநாயகத்திற்கு விரோதமாக யார் கைது செய்யப்பட்டாலும் தி.மு.கழகம் குரல் கொடுக்கும்.

ஆனால், வெட்கத்தைப் பற்றி எல்லாம் நீங்கள் பேசலாமா அமைச்சர் அவர்களே?

'தாய்மண்' இதழிலும் சரி, காலச்சுவடிலும் சரி பெரியாரின் எழுத்துக்களை திரித்து பரப்பியது யார்? அவதூறுகளை பரப்பியது யார்? இதையெல்லாம் செய்துவிட்டு, 'தந்தை பெரியாரையும் ஏற்றுக்கொண்டவர் களை தான் வி.சி.க ஏற்கும்' என எழுதும்போது உங்களுக்கே சிரிப்பு வரவில்லையா?

அல்லது கடந்த 2022 ஆம் ஆண்டு, அக்டோபர் 02 ஆம் தேதி விசிக ஏற்பாடு செய்த சமூக நல்லிணக்க பேரணியில் நாம் தமிழர் கட்சிக்கு அழைப்பு விடுத்தபோதோ, அதில் சீமான் பங்கேற்ற'போதோ உங்களுக்கு வெட்கமில்லாமல் இருந்ததா? அல்லது, 'ஓடிப்போன கோழை', "பாஜகவால்திட்டமிட்டு களம் இறக்கப்பட்டவர்தான் விஜய்", "பாஜகவுடன் இணைக்கமாக உள்ளார் விஜய்", "சங் பரிவார் அவரை வழிநடத்துகிறது", "ஆர்.எஸ்.எஸ் பெற்றெடுத்த பிள்ளை" என பேசிவிட்டு அந்த ஆர்.எஸ்.எஸ்.பிள்ளைகளுடனே அமைச்சரவையை பகிர்ந்துகொண்டு த.வெ.க.வின் பிரச்சார பீரங்கியாக மாறி இருக்கும் நீங்கள் வெட்கத்தைப் பற்றி பேசலாமா?

தமிழ்நாட்டில் தலித்களுக்கு எதிரான குற்ற சம்பவங்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன; மயானத்தில் முதியவரை அடக்கம் செய்ய போலீசார் முன்னிலையிலேயே ஆதிக்கச் சமூகத்தினரின் காலில் பட்டியலின மக்களை விழ வைத்துள்ளனர். அப்போதெல்லாம் வராத ரோஷம், கோபம் இப்போது மட்டும் வருவது ஏன்?

உண்மையிலையே உங்களுக்கு வெட்கமில்லை வன்னி அரசு அவர்களே, நீங்க நம்பலைனாலும் அதான் நிஜம்!

இவ்வாறு தி.மு.கழக ஐ.டி. பிரிவு பதிலடி கொடுத்துள்ளது.

'டம்மி' முதல்வர் விஜய் ஆட்சியில்

கேள்விக்குறியாகும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு!

நாள்தோறும் குழந்தைகள் – சிறுமிகள் கடத்தல்!

பெரம்பலூர், அக். 23-

பெரம்பலூர் மாவட்டத்தில் பள்ளிக்கு சென்ற இரண்டு மாணவிகள் நேற்று முதல் காணவில்லை என்று பெற்றோர்கள் பரபரப்பு புகார் தெரிவித்துள்ளனர். தவெக ஆட்சியில் குழந்தைகள், சிறுமிகள் என அடுத்தடுத்து மாயமாவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.

பெரம்பலூர்!

தமிழ்நாட்டில் கடந்த சில வாரங்களாக குழந்தைகள், சிறுமிகள் மாயமாகும் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இதுகுறித்து புகார் அளிக்கப்பட்டும் தவெக அரசின் காவல்துறையால் துப்புக் கூடதுலக்கமுடியவில்லை. ராணிப்பேட்டையில் ஒரு வயது பெண் குழந்தை மாயமாகி ஒரு மாதமாகியும் இதுவரை எந்த தகவலும் கிடைக்காமல் காவல் துறை திணறி வருகிறது.

செஞ்சி அருகே 7 வயது சிறுமி மாயமாகி 11 நாட்களாகியும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. இந்நிலையில், பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுக்காவில் உள்ள வெங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10 ஆம் வகுப்பு படித்து வரும் இரண்டு மாணவிகள் நேற்று முதல் காணவில்லை. பள்ளிக்கு சென்ற மாணவிகள் வீடு திரும்பவில்லை என்று அரும்பாவூர் காவல் நிலையத்தில் பெற்றோர்கள் புகார் அளித்துள்ளனர்.

பள்ளிக்கு வந்த மாணவிகள் புத்தகப்பையை வகுப்பறையில் வைத்து விட்டு வெளியே சென்று விட்டனர் என்றும், அதன் பிறகு மீண்டும் பள்ளிக்கு வரவில்லை என்றும் வெங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளி தெரிவித்துள்ளது. அரசு பள்ளி மாணவிகள் இரண்டு பேர் ஒரே நேரத்தில் பட்டப்பகலில் மாயமானதால் பொதுமக்களிடையே அதிர்ச்சியையும், அச்சத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. தவெக ஆட்சியில் குழந்தைகள், சிறுமிகள் என அடுத்தடுத்து மாயமாவதால் பொதுமக்கள் பீதியில் உள்ளனர்.

இராணிப்பேட்டை!

இராணிப்பேட்டை அருகே லாலாப்பேட்டையில் குப்பைகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வரும் லாலாப்பேட்டை பகுதியை சேர்ந்த சேகர் - பிரேமா தம்பதியினர், தங்களது ஒரு வயது பெண் குழந்தையுடன் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது, நள்ளிரவில் எழுந்து பார்த்தபோது குழந்தை காணாமல் போனதைக் கண்டு பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக சிப்காட் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இதையடுத்து, காணாமல் போன குழந்தையைக் கண்டுபிடிக்க போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பெண் குழந்தை மாயமாகி, ஒரு மாதம் கடந்த நிலையில், எந்த வித தகவலும் கிடைக்காமல் போலீசார் திணறி வருகின்றனர்.

'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சி

ஒளிப்பதிவாளர் முருகன் மறைவு!

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 23 –

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் ஒளிப்பதிவாளரும் ஊடகத்துறையில் பல ஆண்டுகள் துடிப்புடன் பணியாற்றி வந்தவருமான சகோதரர் முருகன் அவர்கள் உடல்நலக்குறைவால் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

சகோதரர் முருகன் அவர்களின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் என் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது இரங்கல் செய்தியில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின்

மூத்த ஒளிப்பதிவாளர் முருகன் மறைவு!

சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) ஆழ்ந்த இரங்கல்!

சென்னை, அக். 23 –

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் மூத்த ஒளிப்பதிவாளராகப் பணியாற்றி வந்த ஊடகவியலாளர் நண்பர் முருகன் அவர்கள் திடீர் மாரடைப்பு காரணமாக காலமானார் என்ற செய்தி அறிந்து சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) மிகுந்த அதிர்ச்சியும், ஆழமான துயரமும் அடைகிறது.



தலைமுறை ஒளிப்பதிவாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்குவதிலும் அவர் ஆற்றிய பங்கு என்றென்றும் நினைவு கூரத்தக்கது.

பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு திறமையான ஊடகத் தொழிலாளியை இன்று ஊடக உலகம் இழந்து நிற்கிறது. அவரது இந்த திடீர் மறைவு சென்னை பத்திரிகையாளர் குடும்பத்திற்கும், ஊடகத் துறைக்கும் ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பாகும்.

ஒளிப்பதிவாளர் முருகன் அவர்களின் மறைவால் வாடித் தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், கலைஞர் செய்திகள் தொலைக்காட்சிப் பணியாளர்கள் மற்றும் சக ஊடக நண்பர்கள் அனைவருக்கும் சென்னை பத்திரிகையாளர் சங்கத்தின் (MUJ) சார்பில் எங்களது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு சென்னை பத்திரிகையாளர் சங்கம் (MUJ) தெரிவித்துக் கொள்கிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம்.சி. சந்திரன்

அக்டோபர் 23 (2006)



தனது இளமைக் காலத்திலிருந்தே கழகப் பணியில் ஈடுபட்டு, அம்பத்தூர், முகப்பேர் பகுதிகளில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

அம்பத்தூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

"முகப்பேர் பகுதியில் கழகத்தை வளர்ப்பதில் வளர்பிறை சந்திரன்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின்

ஒளிப்பதிவாளர் முருகன் மறைவு!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி, இரங்கல்!

சென்னை, அக்.23-

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் ஒளிப்பதிவாளராக பணியாற்றிய ஊடகவியலாளர் முருகன் உடல்நலக்குறைவால் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியின் ஒளிப்பதிவாளராக பணியாற்றிய ஊடகவியலாளர் முருகன் அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்திய செய்தி வருத்தமளிக்கிறது.

அவரது குடும்பத்தினர் மற்றும் ஊடகத்துறை நண்பர்களுக்கு அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைச் செயலகத்தில்

பெண்ணிடம் புகாரை வாங்க மறுப்பு!

தலை முடியை பிடித்து இழுத்து தள்ளி காவல்துறையினர் அராஜகம்!

சென்னை, அக்.23-

அ.தி.மு.க பிரமுகர் மீது பாலியல் புகார் அளிக்க வந்த பெண்ணை தாக்கிய போலீசார்.

திருமணம் செய்துகொள்வதாக கூறி ஏமாற்றிய குச்சனூர் அ.தி.மு.க. பிரமுகர் வெங்கடேஷ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட பெண் புகார் அளிக்க வந்தார்.

அ.தி.மு.க. பிரமுகர் வெங்கடேஷ் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு.

தலைமைச்செயலகத்தில் புகார் அளிக்க காவல்துறையினர் அனுமதி அளிக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட பெண் அபிநயா குற்றம் சாட்டினார்.

தலைமைச்செயலகத்தில் புகார் அளிக்க வந்த தன்னை போலீசார் தலைமுடியை பிடித்து இழுத்து தள்ளி அராஜகம் செய்ததாக பாதிக்கப்பட்ட பெண் அபிநயா கூறினார். மேலும் அ.தி.மு.க. பிரமுகர் வெங்கடேஷ் தொலைப்பேசியில் தொடர்ந்து மிரட்டல் விடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட பெண் அபிநயா குற்றம்சாட்டியுள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(21.10.2026)



1. ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அடுத்த வன்னி வேடு பகுதியில் நடு ரோட்டில் வாலிபர் சரமாரியாக வெட்டிக் கொலை ....

2. சென்னை புழல் சிறையில் இருந்து நேபாள நாட்டு கைதி மற்றும் போக்சோ கைதி தப்பி ஓட்டம், பாதுகாப்பு குறைபாடு காரணமா? பரபரப்பு ...

3. கோவை: பீளமேடு பகுதியைச் சேர்ந்த 11ம் வகுப்பு மாணவன் உயிரை மாய்த்துக் கொண்ட துயரம்; சக மாணவர்களால் சாதிய வன்கொடுமை செய்யப்பட்டதாக பெற்றோர் போலீசில் புகார், பள்ளி நிர்வாகம் மீது நடவடிக்கை எடுத்தால் மட்டுமே உடலை பெற்றுக் கொள்வோம் என பெற்றோர் தெரிவிப்பு.....

4. ராமநாதபுரம் சமஸ்தான ராணி பகீர் புகார் , கூலிப்படையை வைத்து கொலை மிரட்டல் செய்கின்றனர், ..

5. ஆவடி அருகே மோரை பகுதியில் வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியின் கழுத்தை அறுத்து, ஐந்து பவுன் தங்கச் சங்கிலியை பறித்துச் சென்ற பெண் வேட மிட்ட ஆசாமி தப்பி ஓட்டம் ...

6. கரூர் அருகே காவிரி நகரில் அரசுப் பள்ளி ஆசிரியர் வீட்டு பூட்டை உடைத்து 32 சவரன் நகை மற்றும் 50 (டாலர்) ஆயிரம் ரூபாய் திருட்டு....

7. உளுந்தூர்பேட்டை அருகே காட்டு நெமிலி கிராமத்தில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் உண்டியலை உடைத்து பணம் கொள்ளை ...

8. சென்னை பள்ளிக்கரணை அருகே தனியார் நிறுவன ஊழியரை வழி மறித்து சரமாரியாக தாக்கி பணம் பறிப்பு.....

9. சென்னை மதுரவாயல் அருகே வீடு மற்றும் தனியார் நிறுவனங்களில் தொடர் திருட்டு , பொதுமக்கள் வியாபாரிகள் அச்சம்...

10. சென்னை கொடுங்கையூர் ஆர்.ஆர். நகர் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் ஓசியில் மது கேட்டு தகராறு, இளைஞருக்கு பீர் பாட்டில் அடி ....

11. விழுப்புரம் அருகே 11 வயது சிறுவன் மாயம், ஏற்கனவே செஞ்சியில் சிறுமி ஒருவர் மாயமான நிலையில் சிறுவன் ஒருவன் மாயமான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது....

12. விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகே பா.ம.க. பிரமுகர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீச்சு ...

13. திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தடை செய்யப்பட்ட வெளி மாநில லாட்டரி சீட்டுகளை போலியாக அச்சு அடித்து விற்பனை செய்த மூன்று பேர் சிக்கினர்...

14. சென்னை கீழ்பாக்கத்தில் மெத்தபெட்டமைன் போதைப் பொருள் மூலம் இளம் பெண்களை போதைக்கு அடிமையாக்கி, சட்டவிரோத செயலுக்கு பயன்படுத்திய கும்பல் ...



15. தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் த.வெ.க. கட்சி நிர்வாகி பதவிக்கு பத்து லட்சம் பேரம் பேசிய த.வெ.க. நிர்வாகி, ஆடியோ லீக் ஆனதால் பரபரப்பு ...

16. ராமநாதபுரம் வெற்றி பேருந்து பயணத்தில் அவமதிப்பு பெண்கள் குமுறும் வீடியோ வைரல் , இலவச பேருந்து திட்டத்தில் பெண்களை மதிக்கிறதே இல்லை

17. சென்னை செங்குன்றம் அருகே புழல் பகுதியில் போதை ஊசியுடன் சுற்றித் திரியும் வாலிபர்கள் , இரண்டு பேர் சிக்கினர் ....

18. விருதுநகர் அருகே தவசிலிங்காபுரத்தில் தவசியப்பன் என்பவர் வெட்டிக் கொலை.

தவசியப்பனின் வீட்டிற்குள் புகுந்த இரண்டு பேர், சரமாரியாக வெட்டி படுகொலை செய்துவிட்டு தப்பி ஓட்டம்.

19. திருநெல்வேலி டவுன் வ.உ.சி. தெருவில் நடராஜன் என்பவரது வீட்டில் பூட்டை உடைத்து 11 பவுன் தங்க நகை திருட்டு.

திருநெல்வேலி டவுன் பாரதியார் தெருவில் கல்யாணி என்பவரது வீட்டிலும் கொள்ளை முயற்சி.

திருநெல்வேலி டவுன் பகுதியில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பாத்திர வியாபாரி ஒருவரது வீட்டில் பணம் கொள்ளையடிக்கப்பட்டது.

திருநெல்வேலி டவுன் பகுதியில் திருட்டு சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதால் மக்கள் அச்சம்.



20. காஞ்சிபுரம் மாவட்டம் சோமங்கலம் மேலத்தூரைச் சேர்ந்த பார்த்தசாரதி எனும் 24 வயது இளைஞர் டெங்குவால் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சைப் பலனின்றி பலி.

தாம்பரம் அரசு மருத்துவமனையில் டெங்கு காய்ச்சலுக்கு உரிய சிகிச்சை அளிக்கவில்லை என உறவினர்கள் புகார்.

தாம்பரம் அரசு மருத்துவமனையில், மருத்துவர்களின் அலட்சியமே இளைஞரின் உயிரிழப்புக்குக் காரணம் என உறவினர்கள் குற்றச்சாட்டு.

21. ராணிப்பேட்டை அருகே லாலாப்பேட்டையில் சேகர் பிரேமா தம்பதியின் ஒரு வயது குழந்தை செப்டம்பர் 23ம் தேதி இரவு மாயமானது.

குழந்தை மாயமானது குறித்துசேகர் பிரேமா தம்பதியினர், ராணிப்பேட்டை சிப்காட் காவல்நிலையத்தில் புகார் அளித்தனர்.

ஒரு மாதமாகியும் எந்த தகவலும் கிடைக்காமல் திணறும் போலீஸ்.

த.வெ.க. ஆட்சியில் கேள்விக்குறியாகும் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு.



சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அண்ணாநகர், ஆயிரம்விளக்கு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக் கழக மறுசீரமைப்பு ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையிலும் தலைமைக் கழக பிரதிநிதிகள் பேராசிரியர் ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், எம்.பி., எஸ்.ஆஸ்டின்,எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் பத்மாவதி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு / பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை தெரிவித்தனர்,